பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
மதுரை ரசாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

# கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள வரலாற்றுத் தொடர்புடைய களங்களைப் பார்வையிட்டதன் அறிக்கை

**நாள் : 14.08.2025**

**கன்னியாகுமரி**

14.08.2025, வியாழக்கிழமை அன்று தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் ஜோஸ்பின் செலின் மேரி மற்றும் ஜீலியட் மேரி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் 53 மாணவிகள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள வரலாற்றுத் தொடர்புடைய களங்களைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

விவேகானந்தர் பாறை, 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை, வட்டகோட்டை முதலான இடங்களை மாணவிகள் பார்வையிட்டனர். சுசிந்திரம் எனும் ஊரில் அமைந்துள்ள தாணுமாலயன் கோயிலில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய முப்பெருங் கடவுள்கள் ஒரே இடத்தில் காட்சி தருபனவாகவும், கலைநயத்துடன் கூடிய சிற்பங்கள், இசைத்தூண்களுடனும் அக்கோயில் அமைந்திருந்தது.

லெமூர் கடற்கரை, முட்டம் கடற்கரை, இயற்கை எழில் கொஞ்சும் திற்பரப்பு அருவி முதலான இடங்களையும் மாணவிகள் கண்டு களித்தனர்.

அடுத்ததாக, 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பத்மநாபபுரம் அரண்மனைக்கு மாணவிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகரமாக விளங்கிய இவ்வரண்மனை இந்தியாவிலேயே மிகப்பழமையான மரத்தால் ஆன அரண்மனை ஆகும். கேரள அரசின் தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இது பழமையான மர கட்டிடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள இக்களங்களை மாணவிகள் பார்வையிட்டதன் மூலம் தமிழ்நாட்டின் கட்டிடச் சிறப்பையும் வரலாற்றுச் சிறப்பினையும் அறிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
மதுரை ரசாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள வரலாற்றுத் தொடர்புடைய களங்கள்

நாள் : 14.08.2025









